**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திருமதி.B. சல்மா B.A., B.L., (Hons.)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் .2, பொள்ளாச்சி**

**2026 ஆம் வருடம் ஜுன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 453/2026**

வின்செண்ட் (41/2026),

த/பெ. துரைராஜ் ..... மனுதாரர்/ உரிமையாளர்

**//எதிர்//**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

கோட்டூர் காவல் நிலையம்,

கு.எண்.100/2026. ......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

**//உத்தரவு//**

1. இந்த மனுதாரர் பிரிவு 497 மற்றும் 503 of BNSS- ன் கீழ் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள வழக்கு சொத்தை இடைக்கால பொறுப்பில் அவரிடம் ஒப்படைக்ககோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் தனக்கு சொந்தமான VIVO மொபைல் போன் Model V40 என்ற மொபைல் போன் வழக்குச் சொத்தாக கோட்டூர் காவல்நிலைய போலிசாரால் வழக்கு பதிவு செய்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அவருக்கு சொந்தமான மேற்படி மொபைல் போனில் மனுதாரருடைய தொழில் தொடர்பான ஆவணங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் சேமிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மொபைல் போன் மனுதாரரின் பயன்பட்டிற்கு அவசியம் தேவைப்படுவதாகவும், அதனை பயன்படுத்தாமல் இருந்தால் பழுதடைந்துவிடும் என்றும், மேற்படி மொபைல் போனை தான் அன்றாட வேலைக்கு பயன்படுத்தி வந்ததாகவும், மேற்படி மொபைல் இல்லாததால் தற்போது மிகுந்த சிரமப்பட்டு வருவதாகவும், மேற்படி மொபைல் போனை தன்வசம் ஒப்படைத்தால் தான் நீதிமன்றம் வேண்டும்போது தவறாமல் ஒப்படைப்பேன் என்றும், மேற்படி மொபைல் போனை வழக்கு முடியும் வரை யாரிடமும் விற்கவோ அல்லது கலரை மாற்றவோ மாட்டேன் என்றும் தெரிவித்து மேற்படி மொபைல் போனை தன் வசம் திருப்பி கொடுக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு வழக்கறிஞர் மற்றும் காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. எதிர்மனுதாரர்/ புகார்தாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் தடயப்பொருளான VIVO மொபைல் போன் Model V40 என்ற மொபைல் மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவானது 10.06.2026 கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 18.06.2026-ல் எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிவிப்பை பெற்று, அதன் பின் ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், வழக்கு சொத்தான VIVO மொபைல் போன் Model V40 என்ற மொபைல் போன் இவ்வழக்கில் எதிர்மனுதாரர்/புகார்தாரரால் கைப்பற்றப்பட்டு தற்போது காவல்நிலைய பொறுப்பில் உள்ளதாக தெரியவருகிறது.

மேலும் இவ்வழக்குக் கோப்புகள், மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், மேற்படி VIVO மொபைல் போன் Model V40 என்ற மொபைல் போன் கோட்டூர் காவல்நிலைய குற்ற எண் 100/2026 என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டு தற்போது காவல்நிலைய பொருப்பில் உள்ளது என்பது தெரியவருகிறது.

மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் இவ்வழக்கின் புலன்விசாரணைநிலுவையில் உள்ளதாகவும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Vivo 40 மாடல் செல்போனில் புகையிலை விற்பனை தொடர்பாக பண பரிவர்த்தனை ஏதேனும் உள்ளதா என்றும், புகையிலை கொள்முதல் மற்றும் விற்பனையில் வேறு யாருக்காவது தொடர்புள்ளதா என்றும் விசாரிக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி செல்போன் இவ்வழக்கின் புலன்விசாரணைக்கு தடயமாக உள்ளதாலும் மேற்படி செல்போனை எதிரியிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி செல்போனை எதிரி மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுத்த வாய்ப்புகள் உள்ளதாகவும், மேலும் மேற்படி செல்போனை இவ்வழக்கில் முக்கிய தடயபொருள் என்பதாலும், அதில் உள்ள தரவுகளை அழிக்கவும் வாய்ப்புகள் உள்ளது என்றும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரி தாக்கல் மனுவினை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

இன்று 2026 ஆம் வருடம் ஜுன் மாதம் 19 ஆம் நாள் இந்த உத்தரவு என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒ/ம். Tmt. B. சல்மா B.A., B.L., (Hons.),
நீதித்துறை நடுவர் எண்-2
பொள்ளாச்சி.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண்-2
பொள்ளாச்சி.